1969 மார்ச் 8] [மாண்புமிகு திரு. சீ. கோவிந்தசாமி]

பத்தில் பரிசோதனைகள் நடந்தேறி வருகின்றன. இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரே வழி இந்நோய் எளிதில் பாதிக்காத பயிர் வகைகளை விளைவிப்பதேயாகும் என்று பரிசோதனைகள் மூலம் தெரிய வருகின்றது. எனவே, பயிர்களின் நோய் எளிதில் பாதிக்காத அரிசி ரகங்களை மேம்படுத்துவதற்கென ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை வகுப்பது குறித்து வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகம் ஆலோசித்து வருகிறது.

தஞ்சாவூர் கழிமுகப் பகுதிகளில், இக்கருகல் நோயின் கடுமை குறித்து ஆய்வு செய்ய அந்நோயைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் குறித்து ஆலோசனைகள் கூற ஃபோர்டு நிறுவன உதவியுடன் பெரிய அறிவியல் வல்லுநர்களின் உயர் நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த வல்லுநர்கள் இதுவரை தஞ்சாவூர்க் கழிமுகப் பகுதிக்கு மூன்று முறைச் சென்று பார்த்தனர். எல்லா ரகங்களிலும் இந்த நோய் கண்டிருந்த தாகவும், ஆனால் அந்த நோய் அவற்றை ஓரளவிற்கே பாதித்ததாயும் அக்குழு கூறியது. மிக பயன்தரும் தானிய ரகங்களைப் பொறுத்த வரையில், பரிவுரை செய்த அளவிற்கு மேற்பட்டு நைட்ரஜன் பயன் படுத்தல், ஒரே ரகத்தை இருமுறை பயிரிடுதல், அதாவது ஐ.ஆர். 8 ரகத்தைப் பயிரிட்டபின் மீண்டும் ஐ.ஆர். 8 ரகத்தையே பயிரிடுதல் மிகக் குறைவான மழை ஆகியவை இந் நோய்க்கான காரணங்களில் சில ஆகும்.

இக் குழுவின் விவரமான அறிக்கையும் அதன் பரிவுரைகளும் எதிர் பார்க்கப்படுகின்றன.

DR. H. V. HANDE: Sir, how are the seeds which are already affected by this Blight disposed of?

மாண்புமிகு திரு. சீ. கோவிந்தசாமி: பரிசோதனைக்குப் பிறகு, அது நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையில் அதைக் கொடுக்காமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். விளைந்த பகுதியில் கூட, இந்த நோய் கண் டிருப்பதை நேரடியாகப் பார்த்த நேரத்தில், அந்த நோய் துரிதமாகப் பரவக்கூடியது, மற்ற இடங்களுக்கும் பரவக்கூடியது என்பதை உணர்ந்து பாதிக்கப்பட்ட பயிரையே கொளுத்தும்படியாகக் கூட செய்யப்பட்டது.

(இ) பல்லடம் தொகுதியில் பருவ மழையின்மையும் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தலும்

திரு. கே. எஸ். குமாரசாமி: தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி யில் பருவ மழை தவறியதின் காரணமாக கிணறுகளில் தண்ணீர் வரண்டு, குடிநீர் இல்லாமல், சொந்தக் கிணறுகள் உள்ளவர்களிடம் பணம் கொடுத்து வாங்க வேண்டியுள்ளதால், பஞ்சாயத்துக் கிணறு களையும் ஹரிஜனக் கிணறுகளையும் ஆழப்படுத்த வேண்டிய அவசிய அவசர பொது முக்கியமான காரியத்தைக் மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டுகளாக, கோவை மாவட்டத்தில் பருவ மழை தவறியது குறித்து அவ்வப்போது அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன் விளைவாக, மாவட்டம் முழுவதிலும் நிலத்திற்கடியில் உள்ள நீர் மட்டம் கணிசமான அளவிற்குக் கீழே சென்றுவிட்டது. குடிநீர்க் கிணறு கள் பல வற்றிவிட்டன. என்றும் அறிவிக்கப்பட்டது. எனவே இக்கிணறு கள் பலவற்றை ஆழப்படுத்த வேண்டியிருந்தது. 1967-68-ம் ஆண்டில் இப்பணிகளுக்காக இம்மாவட்டத்திற்கு அரசு ரூ. 22,12,500 ஒதுக்கியது. அரிசனக் குடியிருப்புகளில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மேலும், ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1968 ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சீர்கேடான பருவ நிலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக மேலும் ரூ. 6 லட்சம் அனுமதிக்கப்பட்டது.

பெரும்பாலான குடிநீர்க் கிணறுகள் வற்றிவிட்ட காரணத்தால் குடிநீர் வசதி அளிக்கும் அவசரத் தேவையை வலியுறுத்தி 1969, பிப்ரவரியில் பொது மக்களிடம் இருந்து முறையீடுகள் வந்துள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அரசிற்குத் தெரிவித்தார். ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தும் பணியைப் பெருமளவில் மேற்கொண்டுள்ளன என்றும் 31-12-1968 வரையில் அவை ரூ. 21,23,208-ஐ செலவிட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார். சீர்கேடான பருவ நிலையினால், பல்லடம், சூலூர் ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய பல்லடம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 1,57,688 செலவிடப்பட்டுள்ளது. இந்த நெருக்கடி நிலையைத் தீர்க்க மேலும் ரூ. 8,00,000 ஒதுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரும், நில வருவாய்த் துறை ஆணையாளரும் பரிந்துரைத்துள்ளமையால், குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, கோவை மாவட்டத்திற்கு ரூ. 8,00,000 மானியம் வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதை கொடுத்தாலே அப்பகுதிக்கு நிதியும் கிடைக்கும், நிலைமையும் விரைவில் சீரடையும்.

திரு கே. என். குமாரசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் கிணறுகள் வெட்டியும் தண்ணீர் கிடைக்கவில்லை. போர்வெல் வைத்து 200 அடி, 250 அடி ஆழம் எடுத்தால்தான் தண்ணீர் கிடைக்கும். இதனால் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் போர்வெல் போட அதிக நிதி பொறுப்பாகிறது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களின் நிதிப் பொறுப்பைச் சரிக்கட்ட, அரசாங்கம் அதிகமான அளவில் பணம் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் மேல்தான் இது செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தக்க விவரம் அரசாங்கத்திற்குக் கிடைத்தால், உடனடியாக அரசாங்கம் ஆவன செய்யும்.

6. 1969–70-ம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1969–70-ம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் (கடைசி நாள்) நடைபெறும். முதலில் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுவார்கள்.

***திரு ம. பொ. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்பு நிதியமைச்சர் அவர்கள் வைத்துள்ள 1969–70-ம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீது இரண்டொரு கருத்துக்களைத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றத்தின் முன்பு வைத்துள்ள வரவு–செலவுத் திட்டத்தில் புதிய வரி இல்லையென்பது நாடு முழுவதும் மகிழ்ச்சியடையக் கூடிய ஒரு முக்கியமான அம்சமாகும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை எற்ற பிறகு மூன்றாவது பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறது. இந்த மூன்றாவது வரவு–செலவுத் திட்டத்திலும் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து புதிய வரிகள் எதுவும் இல்லாமலேயே நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பது சென்னை ராஜ்ய அரசின் வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தைத் துவக்கி வைத்திருக்கிறது. புதிய வரிகள் இல்லாத நிலைமையிலும், சமுதாயத்தின் அடித்தளத்திலே உழலுகின்ற சாமானிய, தாழ்த்தப்பட்ட, அழுத்தப்பட்ட பிற்பட்ட மக்கள் நலன் அடையக்